

# அமரர்

# மயில்வாகனம் தருமநாயகி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்



24.11.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம், தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும்,
ஜெயந்திநகர், கிளிநொச்சியை வதிவிடமாகவும்
கொண்ட

அமரர்

# மயில்வாகனம் தருமநாயகி

அவர்களின் 31ஆம் நாள்

# நினைவு மலர்

## 24.11.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எல்லா வழிகளிலும்
எம் இல்லம் வாழ, சமூகம் உயர்ந்திட
பண்பும் பாசமும் நேசமும் காட்டி
இப் புவி மீது வாழ்ந்து
இறைவன் திருப்பாதம் அடைந்திட்ட
எம் குடும்பத்தலைவி ஞாபகார்த்தமாக
இம் மலரை அன்புடன்
சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!**

***இவ்வண்ணம்***
***குடும்பத்தினர்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள் நினைவாக...



தோற்றம்
24
02
1929

மறைவு
26
10
2022

யாழ்ப்பாணம், தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும்,
ஜெயந்திநகர், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர்
# மயில்வாகனம் தருமநாயகி

## திதி நிர்ணய வெண்பா

சுபகிருது ஆண்டு ஐப்பசித்திங்கள்
ஒன்பது வந்த வளர்பிறை பிரதமையில்
குணமுடையாள் தருமநாயகி குறையிலான்
திருப்பாதம் வணங்கிச் சேர்ந்தனள் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்
பரனே பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்றருள் புரியாயே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசைய

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்கமலர்க் கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்

## திருப்புகழ்

உம்பர்தருத் தேநுமணிக் ...... கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் ...... துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் ...... பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் ...... றருள்வாயே
தம்பிதனக் காகவனத் ...... தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் ...... கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் ...... பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்தவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி.மயில்வாகனம் தருமநாயகி அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டின் வளம்பொங்கும் வடபகுதியான யாழ் மண்ணில் தெல்லிப்பழையில் உள்ள வறுத்தலைவிளான் எனும் கிராமத்தில் கந்தையா லட்சுமி இணையருக்கு புதல்வியாக அவதரித்தார். இவர்கள் குடும்பத்தில் இரண்டு பிள்ளைகள் இவரது மூத்த சகோதரன் கந்தையா - குலசேகரம் அம்மையார் இளைய மகளாக 1929ஆம் ஆண்டு மாசி மாதம் 24ஆம் திகதி அன்னை மடியில் அவதரித்தார்.

இவர் பள்ளிப்பருவம் அடைந்ததும் யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்றார். பாடசாலைக் காலத்தில் மிகவும் கெட்டித்தனமானவராகத் திகழ்ந்தார். நற்பண்பு மிக்க சிறந்த மகளாக விளங்கினார்.

பின்னர் மணப்பருவமடைந்த வேளையில் கொக்குவிலைச் சேர்ந்த திரு. விசுவலிங்கம் மயில்வாகனம் அவர்களை 1949 ஆம் ஆண்டில் கரம்பற்றினார். இவர்களின் இனிய இல்லற வாழ்வில் இவர்களுக்கு ஆறு மழலைச்செல்வங்கள் வந்துதித்தனர். இவர்களின் இல்வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமைந்தது.

1951ஆம் ஆண்டில் கணவருடைய வேலையின் (பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை) நிமித்தம் கிளிநொச்சி மண்ணில் குடியேறினார். கணேசபுரம் எனும் கிராமத்தில் 05 வருடங்களாக வாழ்ந்தனர். அதன் பிறகு ஜெயந்திநகர் கிராமத்தில் காணி வாங்கி வீடமைத்து அவர்களது வாழ்க்கைப் பயணம் தொடர்ந்தது.

மயில்வாகனம் தருமநாயகி இணையர் தமது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காய் அரும்பாடுபட்டு உழைத்தனர். **"முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்"** என்கின்ற ஆன்றோர் வாக்கிற்கமைய இவர்கள் தமது சொந்த முயற்சியில் தமது வாழ்வில் முன்னேற்றம் கண்டனர். தமது நான்கு பெண்பிள்ளைகளுக்கும் 04 காணிகள் வாங்கி அவர்களுக்கு வீடமைத்துக் கொடுத்து மகிழ்வடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமநாயகி அம்மா அவர்கள் அவரது பெயருக்கு ஏற்றாற்போல மிகவும் இரக்க குணமும் ஈகைக்குணமும் உடையவர். தன்னை நாடி வருவோருக்கு உதவிகள் பல புரியும் அன்புள்ளங் கொண்டவர் அனைவர் உள்ளங்களையும் தனது வசீகரப் பேச்சினாலும் அரவணைக்கும் உயர்ந்த நற்பண்பினாலும் கவர்ந்து கொண்டவர்.

அது மட்டுமன்றி அன்னை மிகுந்த தெய்வ பக்தி உடையவர். தனது இல்லம் அமைந்துள்ள வளாகத்திலே அம்மன் ஆலயம் ஒன்றையும் நெடுங்காலமாக ஆதரித்து வந்தார். தனது வயோதிப காலத்திலும் அம்மனுக்குரிய தொண்டுகளை செவ்வனே நிறைவேற்றும் சிறப்புடையவர்.

அம்மா இப்புவிதனில் நீண்ட காலம் வாழ்ந்த போதிலும் அவரை நோய் நொடிகள் அண்டியதில்லை. இருப்பினும் முதுமையின் காரணமாக நடக்கமுடியாதிருந்தார். கடந்த ஆறு ஆண்டுகளாக அம்மாவினால் நடக்க முடியாதிருந்த போதிலும் அவரது பிள்ளைகளின் அரவணைப்பில் ஒரு குழந்தைப் பருவம் போன்று அவரது காலங்கள் கடந்தது.

கால நீட்சியில் கடந்த 26.10.2022 அன்று காலை 07.10 மணியளவில் ஐப்பசித் திங்கள் வளர்பிறை பிரதமையில் அன்னார் இறைவனடி சேர்ந்தார்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

எனும் திருவள்ளுவர் வாக்குக்கு அமைய அம்மா அவர்கள் இறைவன் திருப்பாதத்தில் பள்ளி கொண்டிருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

- குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த மகளின் உள்ளத்திலிருந்து.

என்னைப் பெற்ற தாயே! தெய்வமே!
எங்களை விட்டு எங்கு சென்றீர்கள்?
நீங்கள் இறந்த செய்தி கேட்டு
துடியாய்த் துடித்தேன்
எங்களை வளர்ப்பதற்காய் அரும்பாடுபட்டீர்கள்
எனது திருமணத்திற்குப் பின்னரும் கூட எனக்கு மிகுந்த பக்கதுணையாக இருந்தீர்கள்
எனது வாழ்வின் கஸ்டமான தருணங்களில் எல்லாம் ஆறுதலளித்து மனத்தைரியம் தந்தீர்கள்
எமது மழலைச் செல்வங்களை வளர்த்தெடுப்பதில் மிகவும் உயரிய பங்கு உங்களுடையது.
எனது அம்மாவின் அன்பிற்கு ஈடு இணை எதுவுமில்லை இவ்வுலகில் நான் இனிமேலும் அம்மா என்று யாரை அழைப்பது.
உங்களுடைய அன்பிற்குரிய மருமகனும் என்னைத் தனியாகத் தவிக்கவிட்டு இறைவனடி சேரந்துவிட்டார். அவரது பிரிவுத்துயரிலிருந்து நான் மீண்டு வருவதற்குள் உங்களது திடீர் மறைவு என்னால் தாங்கமுடியவில்லை
"அன்னை ஓர் ஆலயம்" என்பதற்கிணங்க

நீங்கள் எமக்கு எல்லாமுமாக விளங்கினீர்கள். நீங்கள் எங்களுக்கு நல்லதொரு குரு
பள்ளியில் கற்றதைக் காட்டிலும் உங்களிடம் கற்றதே ஏராளம் நற்பண்புகள் சொல்லித் தந்து வளர்த்தீர்கள்.

தாய்மடியில் கிடைக்கும் ஆறுதல் சுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே கைவிட்டுப்போனது. நீங்கள் வழிகாட்டியமைக்கமைய சகோதரிகள் நாம் எந்நாளும் ஒற்றுமையாய் இருப்போம். நீங்கள் கற்றுத்தந்த அனைத்துமே வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்போம். உங்களை எங்கள் மனங்களில் இருத்திப் பூஜை செய்வோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.



உங்களின் மூத்த மகள்
மனோகர தேவி ( ராணி)

**நீங்காத வலிகளைத்**
**தந்து நீங்கள்**
**பிரிந்து போனதேனோ?**
**நீங்கள் பிரிந்தாலும்**
**நினைவுகள் பிரிந்து**
**போகாதே எப்போதும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருமதேவதை எம் அம்மா...........

எமக்கு உயிர் தந்து உறவானவள்
உறவின் ஆரம்பமானவள் - இன்று
உம் உறவிழந்து நிற்கின்றோம் - அம்மா

உங்கள் இழப்பை ஏற்க மனம் மறுக்கின்றது
இனி இவ்வுலகில் அம்மா என்றழைக்க உறவில்லை
"அம்மா" என்ற சொல்லே - இந் நாள் வரை அகிலத்தில்
வாழும் பலம் தந்தது.

எமக்காய் அல்லும் பகலும் உழைத்து
நாம் உயர்வடையத் தன்னை உருக்கிய
உயர்ந்த உள்ளம் எங்கள் அம்மா
உங்கள் நினைவுகளுடனே நம் பயணம்.....

என்றும் அன்புடன்
பிள்ளைகள்
மாலினி (கிளி), ராசாத்தி, மஞ்சுளா,






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள மாமிக்கு ஆசையாய் ஒரு மடல்

பிரிவில் ஏன் இந்த அவசரம்
புரியவில்லை எனக்கு
இனம் புரியாத சோகம், தலைவியை இழந்து
விட்டோம் என்று ஆற்ற முடியாத ஏக்கம்

யாருக்கும் தீங்கு நினைக்காத அன்புள்ளம்
அனைவருக்கும் உதவி செய்யும் கருணை உள்ளம்
இப்படியோர் மாமி எனக்கு கிடைத்தது வரம்

உங்களை எங்கள் கரங்களில் குழந்தையாய்
அரவணைத்து நின்றோம் - உங்களின் திடீர்
மறைவு தாங்கமுடியாது மனம் தவிக்கிறது
ஆனாலும் நீங்கள் எங்கள் நினைவுகளில்
எப்போதும் பத்திரமாய்!

**அன்புடன் மருமகன்**
**குமார்**

**எப்படி வேணுமானாலும்**
**வாழ்ந்து விட்டுப் போங்கள் - ஆனால்**
**பிறருடைய கஷ்டத்துக்கும்**
**வலிக்கும் மட்டும் காரணமாகிவிடாதீர்கள்.**
**அது உங்கள் வாழ்நாள் முழுவதும்**
**நிம்மதி இழக்க வைத்து விடும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பிற்குரிய மாமி...

எமது வாழ்க்கைப் பயணத்தின் ஆதாரம்
எனது அன்பான மாமி
மாமி எங்கள் மீது காட்டிய அன்பு
தாயன்பையும் தாண்டி அரவணைத்திடும்

வாழ்வில் ஏற்பட்ட கஸ்டதுன்பங்கள்
எல்லாம் முகங்கொண்டு சுமைதாங்கியானார்
எனது துன்பமான காலப்பகுதிகளிலும்
எனக்கு மிகவும் ஆறுதலளிக்கும்
தாயாகி நின்றார்

பண்பு மிக்க தெய்வபக்தி நிறைந்த
எங்கள் அன்பு மாமியை இழந்த
துயரம் எமது மனங்களில் மிகுந்த
ரணமாக வலி தருகின்றது.

தெய்வமாக இருந்து எங்களை
வழிநடத்துங்கள் மாமி.

அன்பு மருமகள்
ரஞ்சி



**நான் இந்த உலகிற்கு
வரும் முன்னரே
கேட்டு இரசித்திட்ட
அழகான இசை
அம்மாவின்
இதயத்துடிப்பு மட்டுமே!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மா

அம்மாவின் மறுவடிவம் நீங்கள்
உங்களுக்கு நிகர் நீங்கள் மட்டுமே
நீங்கள் எமக்களித்த அன்பும் அரவணைப்பும்
வழிகாட்டலுமே எம்மை சமூகத்தில்
அந்தஸ்துள்ளவர்களாய் உயர வைத்தது

தாய்ப்பறவை குஞ்சுகளைக் காப்பது போலவே
எம்மை நேசமுடன் அரவணைத்தீர்கள்
பிள்ளைச் செல்வங்களுக்காய்த் தன்னை
அர்ப்பணித்த எம் உயர்ந்த அன்னை

நிமிர்ந்த நடையும் கடமையில் கண்ணியமும்
தெய்வ பக்தியும் இரக்க குணமும் உங்களை
உயர்ந்த இடத்தில் நிலை நாட்டியது
எமது அன்பு அம்மம்மாவின் நினைவுகள்
எப்போதும் எம் முன் நிழலாடும்

**உங்கள் அன்புக்காய் ஏங்கும்**
**பேரப்பிள்ளைகள்**

**பாலூட்டி சீராட்டி பசி**

**மறந்து என்னை**

**காத்தாயே!**

**அம்மா என நான்**

**அழைக்கும் ஒரு**

**சொல்லுக்கு!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டப்பிள்ளைகள்

பூட்டம்மா என்றழைக்கும் போது உங்கள்
முகத்தில் புன்முறுவல் பூக்கும்
பாசம் நேசம் பக்குவம் பாதுகாப்பு
எல்லாவற்றையும் எங்களுக்கு தந்தீர்களம்மா

உங்களின் வாழ்க்கைப் பயணத்தில்
இறுதிக் காலங்களில் நீங்களும்
குழந்தையாக மாறி அப்பம்மா தாத்தாவின்
அரவணைப்பில் இருந்தீர்கள்

பூட்டம்மா எமக்கு இருக்கிறார்
என்று சொல்லிப் பெருமிதம்
கொள்வோம் நாங்கள்
இப்போது நீங்கள் எங்களுடன் இல்லை
மனம் ஏற்க மறுக்கின்றது.

**உங்கள் அன்பான**
**பூட்டப்பிள்ளைகள்**

**ஒவ்வொரு நாளும்**
**கவலைப்படுவாள்**
**ஆனால்**
**ஒரு நாளும்**
**தன்னைப் பற்றி**
**கவலைப் பட மாட்டாள்**
**அம்மா!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மா

அம்மம்மா எனும் அருமை ஆளுமை
காடுவெட்டி காணி அளந்த
புராதனம் பொக்கிசம்
புராணங்கள் அனைத்தும்
அறிந்த அறிவித்த
பெருந்தகை பெருமாட்டி
நோயின்றி வாழ்ந்த
வியத்தகு நூதனம்
ஓய்வின்றி உழைத்த
வல்லமை முன்னுதாரணம்
உழுது பயிரிட்டு உணவுதந்த
உழத்தி உத்தமி
களை எடுக்க கற்றுத் தந்த
கலா பூசணம்
மொக்கு விறகு பிளக்க விளக்கம்
கற்றுத்தந்த வித்தகி
சகலகலா வல்லியே
சமர்ப்பிக்கின்றேன்
சமர்ப்பணம்

அன்புடன் பேரன்
கோணேஸ்

உருவம் தெரியாத கருவிலும்
என்னைக் காதல் செய்தவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மாவுக்கு கடிதம்

என் ஆசை அம்மம்மா!
என்னைப் பெற்ற என் அம்மாவைப் பெற்றவளே!
தொண்ணூற்று மூன்று வயது வரை வாழ்ந்து இயற்கை மரணத்தைச் சந்தித்த உங்கள் பெருமை சொல்ல உங்கள் பேர்த்தி மதிவதனிக்கு வார்த்தைகள் போதவில்லை தங்கமே!

உங்கள் இளம் வயதில் குடும்பப் பாரத்தைத் தியாகமாய்த் தூக்கிச் சுமந்த உங்கள் வீரத்தை பிறர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் நானும் பார்த்திருக்கின்றேன். வயலில் நாற்று நட்டு அறுவடை செய்து பிள்ளைகளின் பசி ஆற்றிய தாயே! உங்கள் வியர்வைத் துளிகள் தான் குடும்பத்தின் கண்ணீர்த் துளிகளைத் தடுத்துக் காத்தது என் தங்கமே!

உங்களுக்கு என ஒரு ஆசையும் இல்லாமல் கொண்டவரையும், பிள்ளைகளையும் பெரும் பேறாய் எண்ணிக் காத்தீர்களே! வாழ்வின் போராட்டங்கள எல்லாம் உங்கள் வீரத்தாலும் விவேகத்தாலும் முந்தானைக்குள் முடிந்து வைத்தீர்களே! வயது முதிர்ந்து ஓடிக்களைத்து ஓய்ந்த உங்கள் பாதங்களுக்கு உங்கள் பேர்த்தியின் பாச முத்தங்கள்.

பேரப்பிள்ளைகளுக்கு பிடிக்குமென பனங்கிழங்கு, சோளம், பலாப்பழம், மாம்பழம், வாழைக்குலை, இனிப்பு என தலையில் கொள்ளாத பாரத்தோடும் மலை போன்ற பாசத்தோடும் பலமைல் தொலைவு கால் நோக பல காலம் நீங்கள் நடந்திருக்கின்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பசியாறும் போது அதைப் பார்த்து உங்கள் வயிறு நிறைந்திடும். உங்கள் கண்டிப்புப் பார்வையால் எல்லோருக்கும் ஒழுக்கம் கற்றுக் கொடுத்தீர்களே!

இறைவன் மேல் பக்தியும் மனிதர் மேல் பிரியமும் இரண்டும் கண்கள் என உரத்து சொன்னீர்களே! அப்படியே நீங்களும் வாழ்ந்தீர்களே!

ஓராயிரம் நல்லது கெட்டது பார்த்த மூதாட்டியான உங்களை நிறைந்த மனதோடு தான் வழியனுப்பி வைத்தோம். இருந்தாலும் உங்களை நினைக்கும் போது ஏக்கமும் துக்கமும் கலந்து மனதில் அழுகை வருகிறது அம்மம்மா.

சத்தமில்லாமல் நீங்கள் காட்டிய எல்லா அன்பிற்கும் உங்கள் பேர்த்தியின் கோடி முத்தங்கள்.

கோடுகளோடு சுருங்கிய உங்கள் முகம் பேரழகாய் என் மனதில் காலம் முழுவதும் இருக்கும்.

உங்களைப் போல பெருவாழ்வு நாங்கள் வாழ உங்கள் ஆசிகள் எங்களோடு இருக்கும்

போய்வா அம்மம்மா.

**அன்பான பேர்த்தி**
**மதிவதனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகருக்குரிய
## அதிமுக்கிய பதினாறு மந்திரம்

01 ஓம் சுமுகாய நம
02 ஓம் ஏக தந்தாய நம
03 ஓம் கபிலாய நம
04 ஓம் கஜகர்ணிகாய நம
05 ஓம் லம்போதராய நம
06 ஓம் விகடாய நம
07 ஓம் விக்னராஜாய நம
08 ஓம் விநாயகாய நம
09 ஓம் தூமகேதுவே நம
10 ஓம் கணாத்யஷாய நம
11 ஓம் பாலச்சந்திராய நம
12 ஓம் வக்ர துண்டாய நம
13 ஓம் சூர்ப்ப கர்ணாய நம
14 ஓம் ஹேரம் பாய நம
15 ஓம் ஸ்கந்த பூர்வாஜய நம
16 ஓம் மகாகணாதிபதயே நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஔவையார் அருளிய
## விநாயகர் அகவல்

திருச்சிற்றம்பலம்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்


கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிலும் பிறவி சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விழங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்து
உண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி
(நூல் நிலைமண்டில ஆசிரியப்பா)

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக


சுவாமி மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்


பழமுதிர்ச்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டகுடகு டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க


திருத்தணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க


பழனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்


திருச்செந்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாற்கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
எறிய விஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்



திருப்பரங்குன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்



நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்


செல்வச் சந்நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் – சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்


கதிர்காமம்

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக்காப்பு



**விநாயகர் துதி**

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

**வேண்டுதற் கூறு**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவி
அமரர் மயில்வாகனம் தருமநாயகி
அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து எம்
ஆறாத் துயரில் பங்கெடுத்த அயலவர்கள், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும், கண்ணீர்
அஞ்சலிகள், மலர்வளையங்கள், சமர்ப்பணம்
ஆக்கியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம்
தெரிவித்தோருக்கும், விருந்தோம்பல்களை
நல்கியோருக்கும், எமது அன்னையின் இறுதிப்பயணத்தை
நேரலையில் ஒளிபரப்பியவர்களுக்கும், இறுதிக்கிரியை,
ஆத்மசாந்திக் கிரியைகள் நிகழ்த்திய குருமாருக்கும்,
பல்வேறு வழிகளிலும் உதவிகள் நல்கிய
அனைத்துள்ளங்களுக்கும் இம்மலரை அழகுற அச்சிட்டு
உதவிய வேழன் பதிப்பகத்தினருக்கும், எல்லோருக்கும்
எமது இதய பூர்வமான நன்றிகள்!!!



இங்ஙனம்
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவ

❖ கந்தையா + ❖ லக்சுமி

- ❖ தருமநாயகி
- ❖ குலசேகரம்

மனோகரதேவி
+
❖ தெய்வேந்திரம்

- மோகனதாஸ்
- கமலதாஸ்
- சந்திரதாஸ்
- மதிவதனி
- சந்திரவதனி
- இந்திரதாஸ்
- தருமதாஸ்
- இந்திரவதனி

மாலினிதேவி
+
❖ நாகரத்தினம்

- சத்தியவாணி
- சத்தியசீலன்
- சந்திரவதனி
- யோகவதனி
- தருமசீலன்

❖ யோகேஸ்வரன்
+
❖ சகாயமேரி

- செரூன்

### பூட்டப்பிள்ளைகள்

| | | |
|---|---|---|
| நிரோசன் | கவிதா | பிரவீனா |
| நிதுஷா | கிறேஸ் | விஜய் |
| திவினா | அபிநயன் | சஞ்சய் |
| கயல்விழி | டிலானி | சுஜீவன் |
| சியானா | கீர்த்தனா | திவ்வியா |
| மீரா | கவின் | ரம்மியா |
| சந்தியா | கெவின் | ஐஸ்வரி |
| அருண் | இமானுவேல் | யா |
| சுகிர்தா | யோஜல் | இன்பலோஜினி |
| யசோதா | ஹெறாலி | யோகசாளினி |
| மீனா | பிளஸ்சிங் | நிலோஜன் |
| | | நிருபன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி தோன்றல்

❖ விசுவலிங்கம் + ❖ ஆச்சிமுத்து

- ❖ மயில்வாகனம்
- ❖ மருக்கொழுந்து
- ❖ கனகசபாபதி
- ❖ முத்துராசா

ரன்

- கனகாம்பிகை + முத்துக்குமார்
  - ஜனகன்
  - மேனகன்
- ❖ உதயகுமார் + ரஞ்சிதாதேவி
  - தேவரூபன்
  - கோபிதா
  - பிரதீப்
- மஞ்சுளாதேவி + ❖ சந்திரகுமார்
  - உதயதீபன்
  - ஈழதீபன்
  - இனியதீபன்

நிலக்சன்
ஆதிரையன்
ஆருகன்
நிதர்சன்
நிருஜன்
அபிராமி
றாகவி
அட்சயன்
ாஜினி ஆதித்தியன்
ளினி அஸ்விகா
ன்

**கொப்பாட்டப் பிள்ளைகள்**

| | |
|---|---|
| யோசப் | ஈனோக் |
| சேயோன் | சாமுவேல் |
| ஜீவன் | கவியாளன் |
| யோகானிஸ் | சாகித்தியன் |
| குளோரி | நிவர்த்திகா |
| பென்சமின் | அஸ்வின் |
| ஆரோன் | அஸ்மியா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **அமரர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுபவம் என்பதே அறிவு

பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப்பார் என இறைவன் பணித்தான்
அன்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பு என்பது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்

ஒவ்வொன்றையும் மனிதன் அனுபவித்தேதான்
உணரவேண்டுமா?
அனுபவித்தேதான் அறிவது வாழ்வெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் வந்து
அனுபவம் என்பதே நான்தான் என்றார்.

-கவிஞர் கண்ணதாசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579